1972 மார்ச் 8]

மேட்டூர் உயர்மட்டக் கால்வாய்

*369 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டூர் உயர்மட்டக் கால்வாயில் பாசன விஸ்தீர்ணத்தை அதிகரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

சுங்க வசூல்

*370 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நம் மாநிலத்தில் தற்போது எத்தனை பாலங்களில் டோல் வசூலிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தற்போது நான்கு பாலங்களில் சுங்கம் வசூலிக்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா : நமது தமிழகத்தில் நிதிப் பற்றுக் குறை காரணமாகப் பல இடங்களில் கட்டப்பட வேண்டிய பெரிய பாலங்கள் கட்டப்படாமல் இருக்கின்றன. ஆகவே, எல்.ஐ.சி. போன்ற நிறுவனங்களிடமிருந்தோ அல்லது மத்திய அரசிடமோ கடனைத் தொகைகளைப் பெற்று பாலங்களைக் கட்டி முடித்துவிட்டு அந்தக் கடன் அடைபடுகிற வகையில் டோல் வசூலிக்கும் நியதியை மேற்கொள்ள ஆவன செய்ய அரசு முன்வருமா ? கொள்ளிடம் பாலம் கட்டி பல ஆண்டுகள் ஆகியும் அங்கு இன்னும் சுங்கம் வசூலிப்பது ஏன் என்பது பற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது கட்டப்பட்டு வருகின்ற பாலங்களுக்கு சுங்கம் வசூலிப்பதில்லை. ஏற்கனவே கட்டப்பட்ட பாலங்களுக்குத்தான் சுங்கம் வசூலிக்கப் படுகிறது. கொள்ளிடம் பாலத்தைப் பொறுத்தவரை மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தைப் பற்றிப் பரிசீலித்த பிறகுதான் முடிவு கூறமுடியும். தற்போது வசூலிக்கப்படுகின்ற அந்தப் பணத்தைப் பஞ்சாயத்து பெறுகிற காரணத்தால், இதன் காரண மாகப் பஞ்சாயத்துக்கு வருமானம் வரக்கூடிய நிலைமை இருப்ப தால் இதைப் பற்றிப் பரிசீலித்த பிறகுதான் அரசு முடிவுக்கு வரும்.

திரு. நா. வெ. குருசாமி : நான்கு பாலங்களுக்கு டோல் வசூலிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவை எந்தெந்தப் பாலங்கள் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சிதம்பரம்-சீர்காழி சாலையில் அணைக்காரன் சத்திரத்திற்குப் பக்கத்தில் கொள்ளிடம் பாலம். ஈரோட்டில் இருக்கும் பள்ளிப்பாளையம் காவேரி ஆற்றுப் பாலம். தென்னாற்காடு மாவட்டத்தில் பொன்னியாற்றில் கட்டப்பட்ட பாலம். வட ஆற்காடு மாவட்டத்தில் செய்யாறு பாலம்.

திரு. அ. தேவேந்திரன் : கொள்ளிடம் பாலத்தை அந்தப் பகுதியில் இருக்கும் ஊராட்சி ஒன்றியத்தினுடைய வருமானத்தைக் கருதி அவர்கள் எடுத்துக் கொள்ள கேட்டு அரசு அனுமதித்ததாகத் தெரிகிறது. ஏனைய பாலங்களைப் பொருத்த வரையும் ஊராட்சி ஒன்றியத்தின் நிதி நிலைமையைச் சரிக்கட்டும் வகையில் டோல் வசூலிக்கும் உரிமையை அவர்களுக்குத் தர அரசிடம் செயற்குறிப்பு உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சுங்கம் வசூலிப்பதை ஏலத்தில் விடுகிறோம். ஏற்கெனவே ஏலத்திற்கு விட்டு அரசாங்கத்திற்கு வருமானம் வந்திருக்கிறது. சுங்கம் வசூலிக்கும் உரிமையைப் பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுக்கும்போது கடந்த மூன்று ஆண்டு காலத்தில் வசூலான அதிகமான தொகையை அரசுக்குச் செலுத்திவிட்டு அதற்கு அதிகமான தொகை வந்தால் பஞ்சாயத்து எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்படி பாலங்களுக்குச் சுங்க வரி வசூலிப்பது அதற்குச் செலவான பணம் வசூலாகும் வரையில் வசூலிக்கப்படுகிறதா அல்லது எவ்வளவு காலமானாலும் வசூலிக்கப் படுகிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிக் குறிப்பு இல்லையென்றாலும், செலவை வசூலிக்கும் வரையில்தான் சுங்கம் வசூலிக்க வேண்டுமென்பது எண்ணம்.

திரு. ரா. ரா. முனுசாமி : இந்தச் சுங்கம் வசூலிப்பதில் எல்லாப் பாலங்களுக்கும் 24 மணி நேரம் கொடுக்கும்போது கொள்ளிடம் பாலத்தில் 12 மணி நேரந்தான் கொடுக்கப்படுகிறது. இதனால் காலையில் சுங்கம் செலுத்தி விட்டுப் போகிறவர்கள் இரவு

1972 மார்ச 8]

திரும்பும்போது மறுபடியும் சுங்கம் செலுத்தக்கூடிய நிலை, ஒரே நாளில் இருமுறை செலுத்தக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, இங்கும் 24 மணி நேரம் என்று டைம் கொடுத்து சுங்கம் வசூலிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எல்லாப் பாலங் களுக்கும் 24 மணி நேரத்திற்குத்தான் சுங்கம் வசூலிக்கப்படுகிறது. அப்படி ஏதாவது குறைபாடு இருக்குமானால், எழுதி அனுப்பினால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். இராஜாங்கம் : பேரவைத் தலைவரவர்களே, அமைச் சரவர்கள் கூறிய 4 பாலங்கள் எந்தெந்த ஆண்டில் கட்டப் பட்டனர் ? எந்த அடிப்படையில் அங்கு சுங்கம் வசூலிக்கப்படு கிறது ? அப்படிக் கட்டுவதற்கு அப்போது மதிப்பீடு தொகை எவ்வளவு ? எந்தக் காரணத்தால் அது வசூலிக்கப்படுகிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 1965-ம் ஆண்டுக்கு முன்பு ஒரு பாலம் கட்டுவதற்கு மதிப்பு ரூ. 5 லட்சம் வரை இருக்குமானால் மலைப் பாதைகளுக்குச் சாலை அமைப்பதற்கு சுங்க வரி வசூலிக்கலாம் என்ற கொள்கையிருந்தது. அதற்குப் பிறகு 1965-ம் ஆண்டுக்குப் பிறகு பல வேலைகளுக்கு ரூ. 10 லட்சம் வரை கொடுக்கப்பட்டிருக்கிறது. மலைப்பகுதி சாலைகளுக்குச் சுங்கம் வசூலிக்கவேண்டாம், தேசிய நெடுஞ்சாலையைப் பொறுத்தும் வசூலிக்க வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டது. எந்த ஆண்டு கட்டப்பட்டது என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. தஞ்சாவூரில் இருக்கும் கொள்ளிடம் பாலத்திற்கு ஆன செலவு ரூ. 35 லட்சம். கோவையில் இருக்கும் பள்ளிப்பாளையம் பாலத்திற் கான செலவு ரூ. 13.22 லட்சம். தென்னாற்காட்டில் இருக்கும் பொன்னியாற்றிலிருக்கும் பாலத்திற்கான செலவு ரூ. 14.88 லட்சம். வடாற்காட்டில் இருக்கும் செய்யாற்றுப் பாலத்திற்கான செலவு ரூ. 14.04 லட்சம்.

கோவை மாவட்டத்துக்கு அனல் மின் நிலையம்

* 371 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் அனல் மின்விசை நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், எந்த ஆண்டு அமைக்கப்படும் ?